**செய்தி வெளியீடு எண்: 052** **நாள்: 21.01.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.1.2019) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை**

ஏழைகளின் உள்ளங்களில் விளக்காய் எரியும் தீபமாய், அருந்தமிழ் மண்ணில் வானுயர உயர்ந்து நிற்கும், அறியாமை இருளகற்றும் திருவள்ளுவர் என்னும் அறிவுத் திருக்கோயிலை வணங்குகிறேன்.

பூமிக்கு வந்த புது விடியலாய், புண்ணிய நதியாய்,
தர்மத்தின் மறு பிறவியாய்,
தமிழர்கள் அத்தனை பேரின் இல்லங்களிலும்
விளக்காய் எரியும் தீபமாய்,
அருந்தமிழ் மண்ணில் ஒரே தாயாக வந்த
தாய்மையின் உருவாய் இருக்கும்
அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன்.

“**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**” என்று
தேசிய கவி பாரதியால் போற்றப்பட்ட
திருவள்ளுவரின் பெயரில் நடைபெறும்
இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு
தன்னிகரில்லா நம் தமிழ்மொழியைக் காக்கவும்,
வளர்க்கவும், வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் அத்தனை பேரையும் ஒரே இடத்தில் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி
அடைகின்றேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
மரியாதைக்குரிய திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று
முன்னிலையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும்
தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர்
மரியாதைக்குரிய திரு. **க.பாண்டியராஜன்** அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும்
நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்
திரு. **டி.ஜெயகுமார்** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற
மாண்புமிகு அமைச்சர் திரு.**கே.எ.செங்கோட்டையன்** அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் திருமதி **டாக்டர் வி.சரோஜா** அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் திரு.**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்** அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்
திரு. **கடம்பூர் ராஜு** அவர்களே!
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
திரு. **பா.பென்ஜமின்** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற
நாடாளுமன்ற உறுப்பினர்கள்
திரு.வெங்கடேஷ்பாபு அவர்களே!
திரு.விஜயகுமார் அவர்களே!
டாக்டர்.ஜெயவர்த்தன் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற
சட்டப்பேரவை உறுப்பினர்கள்
திரு.விருகை ரவி அவர்களே!
திரு.தி.நகர் சத்யா அவர்களே!
திரு.நடராஜன், முன்னாள் டிஜிபி அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் முன்னாள் அமைச்சர்
மரியாதைக்குரிய திருமதி.வளர்மதி அவர்களே!

இந்நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செலாளர்
திரு. **இரா. வெங்கடேசன்** அவர்களே!

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற
தமிழ்நாடு அரசின் சிறப்பிற்குரிய விருதுகளை பெற வந்து அமர்ந்திருக்கிற
முன்னாள் அமைச்சர் திரு.பொன்னையன் அவர்கள் உட்பட

விருது பெறவிருக்கிற அறிஞர் பெருமக்களே!
அரசு அலுவலர்களே! தமிழறிஞர் பெருமக்களே !
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
பரத நாட்டியக் கலைஞர்களே!
பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண்
நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் உயிருக்கும் மேலான தமிழை
அன்னைத் தமிழ், ஆட்சித் தமிழ், இனிமைத் தமிழ்,
ஈகைத் தமிழ், உயிர்த் தமிழ், ஊக்கத் தமிழ்,
தென் தமிழ், தேன் தமிழ், ஏழிசை இனிமைத்தமிழ்,
ஒண்தமிழ், ஓது தமிழ், கன்னித் தமிழ்,
சங்கத் தமிழ், செந்தமிழ், நற்றமிழ்,
மதுரத் தமிழ், வளர் தமிழ், முத்தமிழ் என்றெல்லாம்
அளவில்லா அடைமொழிகளோடு
போற்றி புகழுகின்ற நம் தாய்மொழிக்கு
‘‘அறிவியல் தமிழ்’’ என்று ஒரு அடைமொழியை தந்து
‘‘அம்மா’’ என்று உறவுத் தமிழாய் உயர்ந்து நின்றவர்
நமது புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

தமிழர்களிடையே தமிழாக வாழ்ந்து கொண்டிருப்பவர்
நமது அம்மா அவர்கள்.

தமிழ் வளர்ச்சியை தலைத் தொண்டாக ஏற்று செயல்பட்டவர் மாண்புமிகு
‘‘அம்மா’’ அவர்கள்.

தமிழுக்குத் தொண்டு செய்வதென்றால்,
தமிழை வளர்க்கவும், தமிழை பாதுகாக்கவும்
எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கின்ற தமிழ் அறிஞர்களை சிறப்பிப்பதாகும்.
அவர்களுடைய படைப்புகளை நாட்டுடமை ஆக்குவதும், அவர்களை
நினைவுகூரும் வகையில் அவர்களது பிறந்தநாளை அரசு விழாவாக
கொண்டாடுவதும், அவர்களுடைய திருவுருவச் சிலைகளுக்கு மாலையிட்டு
மரியாதை செலுத்துவதும் தமிழறிஞர்களை சிறப்பிப்பதாகும்.
ஒரு நாட்டின் விடுதலைக்கு பாடுபட்ட
சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு
எந்த அளவிற்கு அரசு சிறப்பு செய்து வருகிறதோ,
அதே அளவிற்கு, தமிழ் மொழியின் விடுதலைக்கு

பாடுபட்ட மொழிப்போர் தியாகிகளையும்,
அம்மாவின் அரசு நினைவுகூர்ந்து சிறப்பித்து வருகிறது.

ஒரு நாட்டுக்கே அடையாளம் ''மொழி'' என்கிற பொழுது
அது உயிரினும் மேலானதாக காக்கப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு
அம்மாவின் அரசு உறுதியாக இருக்கிறது என்பதை, மாண்புமிகு அம்மா
அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும்
விருதுகளின் எண்ணிக்கையையும்,
அதற்காக அரசு செய்யும் செலவினங்களையும்
கணக்கிட்டுப் பார்த்தாலே நன்றாகத் தெரியும்.

தமிழின் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் பெறும் பங்காற்றும் தமிழறிஞர்களுக்கு இதுவரை 65 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 5 விருதுகள் போக 60 விருதுகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினால் அறிவித்தவையாகும். இதிலிருந்து அம்மாவின் அரசு, தமிழர்கள் மீதும், தமிழறிஞர்கள் மீதும் கொண்டிருக்கும் அதீத ஈடுபாட்டை நாம் நன்கு அறிவோம்.

தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையில் தை மாதத்தின்
இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாளாக நாம் கொண்டாடி மகிழ்கிறோம்.
தெய்வப் புலவர் திருவள்ளுவரை நினைவுகூரும் நாளாகவும், திருக்குறள் என்னும்
நீதி நெறி நூலை மானுடத்திற்கு வழங்கி தமிழரின் பெருமையை உலகெங்கும்
பரவச்செய்த திருவள்ளுவருக்கு நன்றி நல்கிடும் விழாவாகவும்
இத்திருநாளை நாம் கொண்டாடுகின்றோம்.

'தமிழ்' மொழி தமிழருக்கு அடையாளம் என்றால்,
திருக்குறள் தமிழருக்கு முகமாக இருக்கிறது.
தமிழை நேசித்தால், பிறந்த நாட்டையும், வணங்கும் தெய்வங்களையும், ஈன்ற
பெற்றோரையும் நேசிப்பதற்கும், வணங்குவதற்கும் சமம் என்பதை நாம் புரிந்து
கொள்ள வேண்டும்.
'**தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை**
**தாய்மொழியிற் சிறந்த வேறு மொழியுமில்லை**' என்பதை
நமக்கு நினைவு படுத்தவே இப்படிப்பட்ட நாட்கள் அனுசரிக்கப்படுகின்றன.

நெல்லேரு உழவருக்கும், சொல்லேரு புலவருக்கும்
விழா எடுக்கும் பண்பாடு தமிழருக்கே உரித்தாகும்.
உலகம் இயங்குவதற்கும், மக்கள் வாழ்வதற்கும்
மழையும், கதிரவனும் மிகவும் இன்றியமையாததாகும்
என்பதை உணர்ந்த தமிழர், பொங்கல் பண்டிகையின்

முதல் நாள் மழையையும், இரண்டாம் நாள் கதிரவனையும் போற்றுவது என்றெண்ணி அவற்றை வணங்குகிறார்கள்.
அதன் விளைவுதான்
''**மாமழை போற்றுதும், ஞாயிறு போற்றுதும்**'' என்று சிலப்பதிகாரம் முகப்பு பாடல் வழியாக வணங்கியது.
''**சுழன்றும் ஏர் பின்னது உலகு**'' என்று
உழவின் சிறப்பைக் கூறினார் திருவள்ளுவர்.
தொழிலுக்கு முதன்மையான உழவுத் தொழிலையும்,
தமிழ்ப் புலவரில் முதன்மையானதாக கருதப்படுகின்ற திருவள்ளுவரையும்
நினைவுகூரும் வகையில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.
வாழ வகை சொல்லிய வள்ளுவரையும்,
வாழ உணவு கொடுக்கும் உழவரையும்
நன்றிப் பெருக்கோடு நாம் போற்றும் தினம்தான்
இந்த திருவள்ளுவர் திருநாள்.

உழவனோடு சேர்ந்து நமக்காக உழைக்கும் மாடுகளுக்கும்
நாம் நன்றி தெரிவிக்கிறோம்.

எந்த நூல்கள் மனிதர்களின் மனதோடு பேசி அவர்களுக்குள்ளே தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றனவோ, அவைதான் உலகத்தில் தலை சிறந்த நூல்களாக, படைப்புகளாக மதிக்கப்படுகின்றன, போற்றப்படுகின்றன.

அவற்றையும் மிஞ்சும் அளவிற்கு ஒரு நூல் போற்றி வணங்கப்படுகிறது என்றால் அது திருக்குறள் மட்டும்தான். இந்நூல் மட்டும் தான் உலகில் உள்ள அத்தனை மனிதர்களாலும் வணங்கப்படுகிறது. மற்ற நீதி நூல்களின் பின்னணியில் மதங்களும், சமயங்களும் இருக்கின்றன. திருக்குறளுக்கு அப்படி எந்த பின்புலமும் இல்லை. கடவுள் வாழ்த்து என்ற ஒரு அதிகாரம் இருக்கிறதே ஒழிய, எந்த மதக்கடவுளும் தனித்து வாழ்த்தப்படவில்லை. அதுதான் திருக்குறளின் மகிமை. அதனால்தான் திருக்குறளை உலகப் பொதுமறை என அழைக்கின்றோம்.

மகாகவி பாரதியார் அவர்கள்,
'**யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்**'
என்று கூறினார்.

தமிழ் மொழி அறியாத, வெளிநாட்டில் பிறந்து
தமிழை ஆராய்ச்சி செய்த ராபர்ட் கால்டுவெல்,
**'தமிழ் மொழி தனித்தியங்கக் கூடிய
வல்லமை உடையது'** என்று கூறுவது
தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பு.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித்தன்மை உண்டு.
ஆனால், நம் தமிழ் மொழிக்கு இருக்கும் சிறப்புகள்
வேறு மொழிகளுக்கு நிச்சயமாக இருக்காது.

“**தான் சிதையாமல் மற்ற மொழிகளை வளர்க்கும் தனித்தன்மையும் ஆற்றலும் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு**” என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு செல்லும் வகையிலும், இதுகுறித்து ஆராய்ச்சிக் கல்வியில் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளும் வகையில் மாணவர்களை உருவாக்குவதற்காகவும், அமெரிக்க நூலகங்களிலும், ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான ஆவணங்களை ஆய்வுக்கு உட்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகவும் உலகிலேயே தொன்மையான மொழியாக விளங்கும் தமிழ் மொழிக்கு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 10 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது.

மேலும், சிறப்புமிக்க பல வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படும் என்று நான் கடந்த 8ஆம் தேதி சட்டசபையில் அறிவித்துள்ளேன்.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் மொழி தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றால், பொருள் தேடி கடல் கடந்து சென்று குடியேறிய நாடுகளிலும், தமிழர் என்ற தன் அடையாளத்தை, தன் பண்பாட்டை மறக்காமல் இருக்கும் தமிழர்களின் மொழியுணர்வு தான் அதற்குக் காரணம்.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி மாணவர்களால் பதிவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனைத்தையும் ஒரே தளத்தில் வெளியிட்டு தமிழர்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசு புதிய திட்டத்தையும் அறிவித்து அதற்கான பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

‘**தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்**’ என்பதையே தாரக மந்திரமாக ஏற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகில் அதிக மக்கள் பேசும் சீனம், அரபு, கொரிய மொழிகளில் திருக்குறள், ஆத்தி சூடி, பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டார்கள்.

இன்றைக்கு தமிழ் மொழி நீதி நூல் படைப்புகளாக உலகம் முழுவதும் பரவி தமிழுக்கு மகுடம் சூட்டியிருப்பதற்கு முழுமுதற்காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
பிற மொழியில் உள்ள அரிய படைப்புகளை தமிழிலும்,
தமிழில் உள்ள அரிய நூல்களை பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கச் செய்வதன் மூலம் தமிழை மேலும் வளர்க்க முடியும் என்று எண்ணித்தான்
'**மொழி பெயர்ப்பாளர் விருது**' உருவாக்கி
வருடாவருடம் தமிழ் புத்தாண்டு விழாவில்
10 சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கு விருது வழங்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும் அதனை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

எந்த நாட்டிலே புலவர்கள் ஆதரிக்கப்படுகிறார்களோ,
அந்த நாட்டில்தான் மொழி வளரும்.
மொழி வளர்ந்தால் அந்த நாடு வளரும்.
ஆகவே தான், புலவர்களை ஆதரிக்க வேண்டும்,
தமிழ் மொழியை வளர்க்க வேண்டும்,
அவர்களுடைய படைப்புகளையெல்லாம் ஆதரித்து
காப்பாற்ற வேண்டும் என
பேரறிஞர் அண்ணா அவர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும்
**'விழிபோல எண்ணி நம் மொழி காக்கவேண்டும்'**
என்ற எண்ணத்தில் தமிழறிஞர்களுக்கு புதிய, புதிய விருதுகளை அளித்து சிறப்பித்தார்கள்.

- பேரறிஞர் அண்ணா அவர்கள் **இரண்டாவது** உலகத்தமிழ் மாநாட்டையும்,
- மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் **ஐந்தாவது** உலகத் தமிழ் மாநாட்டையும்,
- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் **எட்டாவது** உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தி தமிழுக்கு புத்துணர்ச்சி ஊட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழுக்கென்று தஞ்சையில் தமிழ் பல்கலைக்கழகத்தை தொடங்கி வைத்தார்கள். மதுரையில் உலகத் தமிழ் சங்கம் நிறுவ வேண்டும் என்று அறிவித்தார்கள். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 38 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வளாகமாக செயல்படுத்தினார்கள்.

மேலும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது. ஓய்வூதியம் பெரும் அறிஞர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு, கவிதை போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இலக்கியத்தில் ஆர்வம் மிக்க 200 கல்லூரி இளைஞர்களை ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து '**இளந்தமிழர் இலக்கியப் பட்டறை**'யின் மூலம் அவர்களுக்கு மொழி புத்துணர்வு அளிக்கப்படுகிறது.

செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகராதியை
காலத்திற்கேற்றவாறு செப்பனிட்டு,
புதிய கலைச் சொற்களை சேர்த்தும்,
புழக்கத்தில் இல்லாத பழைய சொற்களை கழித்தும்,
திருந்திய பதிப்பாக சுமார் 8,000 பக்கங்களைக் கொண்ட
7 தொகுப்புகளாக வெளியிடப்பட இருக்கிறது. இந்தப் பேரகராதி உலகத்
தமிழர்கள் அனைவருக்கும் பயன்படும்வகையில் அமைந்திருக்கும் என்று நான்
குறிப்பிட விரும்புகின்றேன்.

2018–2019ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில்
அறிவித்தபடி தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும்
உதவித் தொகை ரூ.3000/–லிருந்து ரூ.3500/–ஆக
உயர்த்தி வழங்கப்படுகிறது.

குறள் பரிசுத் திட்டத்தின்கீழ், பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கையை
50லிருந்து 70ஆக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறேன்.

தஞ்சாவூர் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள அரிய நூல்களை மின்னாக்கம்
செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

மெரினா வளாகத்தில் தொல்காப்பியர் சிலை அமைக்கும் பணி நடந்து வருகிறது.
முன்னாள் அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன், திரு.மேலாண்மை
பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன்.சவுரிராஜன் ஆகிய தமிழறிஞர்களின்
நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

மேலும், மறைந்த திரு.ஐராவதம் மகாதேவன் அவர்கள் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்க அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும்
தமிழுக்கும், தமிழறிஞர்களுக்கும் பல்வேறு திட்டங்கள் மூலம் நற்பணி ஆற்றி வந்தார்கள். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டிலிருந்து சிறிதும் பிறழாமல், நாங்கள் தமிழ் மொழி தொண்டாற்றி வருகிறோம்.

அதன் வெளிப்பாடாகத்தான்
இந்த இனிய திருவள்ளுவர் திருநாளில்
தமிழ் தொண்டாற்றி வரும் 7 தமிழறிஞர்களுக்கும்,
சமுதாயத் தொண்டாற்றி வரும் 2 பொதுநலவாதிகளுக்கும்
இந்த மாபெரும் சபையில் பலருடைய பாராட்டுகளோடும், வாழ்த்துகளோடும் நான் விருதுகள் வழங்கி சிறப்பித்திருக்கிறேன்.

திருவள்ளுவரின் நெறிகளைப் பரப்பும் நோக்கில் செயல் புரிந்து திருவள்ளுவர் விருது பெற்ற முனைவர் திரு.அன்வர் பாட்சா அவர்களுக்கும்,

சமூக நீதிக்காக சிறந்த பங்காற்றி தந்தை பெரியார் விருது பெற்ற முன்னாள் அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்களுக்கும்,

ஆதிதிராவிட மக்களுக்கு தொண்டு செய்து அண்ணல் அம்பேத்கர் விருது பெற்ற மருத்துவர் ராமகுரு அவர்களுக்கும்,

பேரறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனையின்படி சமுதாய முன்னேற்றத்திற்காக பாடுபட்டு பேரறிஞர் அண்ணா விருது பெற்ற
திரு.மு.அய்க்கண் அவர்களுக்கும்,

பெருந்தலைவர் காமராசரின் அடிச்சுவட்டில் மக்களுக்கு தொண்டாற்றி
பெருந்தலைவர் காமராசர் விருது பெற்ற
திரு.பழ.நெடுமாறன் அவர்களுக்கும்,

மகாகவி பாரதியின் படைப்புகளில் உள்ளவற்றை நுட்பமாக கவிதைகள் மற்றும் உரையாடல்கள் மூலம் பாரெங்கும் பரப்பி மகாகவி பாரதியார் விருது பெற்ற பாவரசு திரு.மா.பாரதி சுகுமாறன் அவர்களுக்கும்,

பாவேந்தரின் கவி மரபினை போற்றும்வகையில் படைப்புகளை வழங்கிய கவிஞர்
என்ற முறையில் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற
கவிஞர் தியாரூ அவர்களுக்கும்,

சிறந்த எழுத்தாளராக தேர்வு பெற்ற தமிழ்த் தென்றல் திரு.வி.க.விருது பெற்ற
முனைவர் கு.கணேசன் அவர்களுக்கும்,

தகைசால் தமிழறிஞராக விளங்கி முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்
விருதுபெற்ற திரு.சூலூர் கலைப்பித்தன் அவர்களுக்கும்

தமிழ்நாடு அரசின் சார்பிலும் எனது சார்பிலும் மனமார்ந்த பாராட்டுகளை
தெரிவித்து,

நீங்கள் இன்னும் பல உயரிய விருதுகளைப் பெற்று
நீண்ட நெடுங்காலம் தமிழ் வாழ்வதற்காக
நீங்கள் வாழ வேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.
நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**